[31st January 1966

of stocks had been declared and stocks requisitioned. But still, we see that as regards ' stocks declared and requisitioned ' in respect of North Arcot, the figure is ' nil '. May I know the reason for the same?

THE HON. SRI V. RAMAIAH : This is with reference to the position as in August-September 1964. What all we have procured in 1965 is altogether different and that is not before the House now.

திரு. ம. கமலநாதன் : 1964-வது ஆண்டில் விவசாயிகள் தங்களிடம் உள்ள இருப்பை 'டிக்ளேர்' செய்வார்கள். அதன் பிறகு அதிகாரிகள் 'ரிக்விஸிஷன்' கொடுத்து, நெல்லை வாங்கிக் கொள்வார்கள். ஆனால், இந்த ஆண்டு விவசாயிகள் வைத்திருக்கும் ஸ்டாக்கை ஸீல் வைத்து ப்ரொக்யூர் செய்யலாம் என்ற அளவிற்கு ஏதாவது கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த ஆண்டு அனுஷ்டிக்கக்கூடிய கொள்கை சம்பந்தமாகத் தனியாகக் கேள்வி போட்டால் முழு விவரம் சொல்ல முடியும். 1964-ம் ஆண்டு சம்பந்தபட்ட ஒரு கேள்வியின் மீது இப்படிப்பட்ட உப கேள்விக்குப் பதில் அளிப்பது கஷ்டம்.

கையாடல் குற்றஞ் செய்த கிராம அதிகாரிகள்

*** 24 கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கையாடல் குற்றத்திற்காகக் கிராம அதிகாரிகள் யாரேனும் ஜன்ம தண்டனை (1965-ஆண்டு) பெற்றிருக்கின்றனர்களா?

THE HON. SRI V. RAMAIAH : Yes. Five Village Officers were proceeded against and sentenced as indicated below :--

Madurai district : Two Village Officers.
Thanjavur district : One Village Officer.
Ramanathapuram district : Two Village Officers.

The above Village Officers have committed the offence of misappropriation of Government money. They were sentenced to pay the misappropriated money and in default to undergo imprisonment till it was paid. They will be released from jail immediately after they or their relatives pay the money.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலின்படி, அவர்களுக்கு ஜன்ம தண்டனை கொடுப்பது போல் இருக்கிறது. ஜன்ம தண்டனைக்குக் கூட 14 ஆண்டுகள் என்று 'கால்குலேஷன்' பண்ணுகிறார்கள். ஆனால், இதில் until such time as the fine is paid என்று சொல்வதால், வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இது வெள்ளைக்காரர் காலத்தில் இயற்றப்பட்ட Malversation Regulation படி நடைபெறுகிறது என்று நினைக்கிறேன். அதை மாற்ற அரசாங்கம் முன்வருமா?

31st January 1966]

கனம் திரு. வெ. ராமையா : அதற்கு வேண்டிய பரிசீலனை இப்பொழுது ரெவினியூ போர்டு முன்னாலே இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சட்டத்தை மாற்றுவதன் அவசியம் ஒருபுறமிருக்கட்டும். சொத்து இல்லாதவர்களுக்குக் கிராம அதிகாரிகள் வேலை கொடுத்திருக்கமாட்டார்கள். அவர்கள் சொத்துக்களை ஜப்தி செய்து அரசாங்கக் கடனை வசூலிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமையா : அவர்கள் 'மிஸ்-அப்ரோப்பிரியேட்' பண்ணியிருக்கும் பணத்தை அவர்களிடமிருந்தோ அல்லது அவர்களுடைய சொந்தக்காரர்களிடமிருந்தோ வசூல் செய்ய முடியும் என்றால், அவர்கள் இந்தத் தண்டனையை அடைய வேண்டியதில்லை. (திரு. மீ. கலியாணசுந்தரம் : சொத்தின் மதிப்பிற்கும் அதிகமாக இவர்கள் 'மிஸ்-அப்ரோப்பிரியேட்' பண்ணிவிட்டார்களோ என்னவோ?)

திரு. சா. கணேசன் : சர்க்கார் பணத்தைச் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்திக்கொண்டோ அல்லது கையாடல் செய்தோ தண்டிக்கப்பட்டவர்கள்; அப்படி அபகரிக்கப்பட்ட தொகை முழுவதையும் திருப்பிக் கொடுத்துவிட்டால் அவர்கள் ஜெயிலிலிருந்து வெளிவந்துவிடலாம் என்பது போன்ற பதிலை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, பணத்திற்குப் பணம் தானா ? அல்லது குற்றத்திற்கு உரிய தண்டனை என்று தனியாக உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : அப்படிப்பட்டவர்களுக்கும் ஜன்ம தண்டனை அளிக்க வேண்டும் என்ற பொருள்பட அந்த 1822-ம் வருடத்திய சட்டம் இருக்கிறது. ஆனால்; அந்தச் சட்டப்படி ஜன்ம தண்டனை அடைந்த ஏந்த ஒரு கிராம அதிகாரியும் அநேகமாக இருக்கமாட்டார் என்று நான் நினைக்கிறேன். அந்த விவரம் என்னிடம் இல்லை. அந்தச் சட்டத்தில் அவ்வாறு இருந்தாலும், மிஸ்-அப்ரோப்பிரியேட் பண்ண பணத்தை அவர்களோ அவர்கள் சொந்தக்காரர்களோ திருப்பிக் கொடுத்துவிட்டால் அவர்கள் விடுதலையாகிவிடுவார்கள்.

MR. SPEAKER : Life sentence is the maximum punishment. People are "punished" for one of two months or even for one week. The Court has got discretion to give punishment. Life sentence is the maximum sentence prescribed.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே இதை நான் சற்று விளக்க விரும்புகிறேன். 'இந்தியன் பீனல் கோட்' பிரகாரம் 'ப்ராஸிக்யூட்' பண்ணி வழக்குத் தொடரலாம். அதற்கு Stated years இருக்கிறது. இத்தனை ஆண்டுகள் என்ற வரையறை இருக்கிறது. ஆனால்; 1822-ம் வருடத்திய Malversation Regulation படி பணம் கொடுக்கிற வரையில் ஜெயிலில் இருக்கவேண்டும் என்று இருக்கிறது; பணத்தை 'ரெகவர்' செய்துவிட வேண்டும் என்பதற்காக

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் 1822-ம் ஆண்டில் அந்த ரெகுலேஷனை இயற்றினார்கள். அது பழைய ரெகுலேஷன். அதை 'ரிவைஸ்' செய்ய வேண்டியதுதான். அது பரிசீலனை செய்யப்படுகிறது.

MR. SPEAKER : Who gives the conviction ?

THE HON. SRI R. VENKATARAMAN : It is not a conviction under the Indian Penal Code. It is a punishment. The Revenue Divisional Officer gives the punishment. The Department punishes the village officer. It says 'Until you pay the fine you will be in Jail'.

MR. SPEAKER : Is it not against the Constitution ?

THE HON. SRI R. VENKATARAMAN : There are certain things existing before the Constitution which are validated by the Constitution. இருந்தாலும் அதை மாற்றவேண்டியது அவசியம்தான்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கிராம மணியக்காரர்கள் கையாடல் செய்து, தொகையைத் திருப்பிக் கட்டாததால் ஆயுள் தண்டனை கொடுக்கிறோம் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் ஒருவருக்கு மட்டும் ஒரு தடவை என்பது அல்ல. ஐந்து இடங்களில் ஐந்து தடவை தண்டனை கொடுத்திருக்கிறார்கள். இது ஒரே நாளில் கொடுத்தது என்று சொல்லவும் முடியாது. அரசியல் சட்டத்தை ஏற்படுத்தி விட்டோம். அரசியல் சட்டத்திலே தனிப்பட்டவர்களுக்கு இருக்கும் உரிமையை 21-ஆவது ஆர்டிகிளில் பார்க்கிறோம். எந்த ஒருவரையும் நீதி ஸ்தலத்தின் முன்னால் கொண்டுவந்து நன்றாக விசாரணை செய்யாமல் தண்டனை கொடுக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

MR. SPEAKER : The hon. Member may come to the question proper.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : முதல் தடவையிலேயே ஏன் ரெவினியூ டிவிஷனல் அதிகாரியோ, ரெவின்யூ போர்டாரோ முன் வந்து, அரசியல் சட்டத்திற்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுத்திருக்கக் கூடாது? இதுவரையில் செய்தது தவறு என்று சுட்டிக்காட்டியும், ஏன் ஐந்து பேர்கள் ஐந்து தடவைகளில் இவ்வாறு தண்டிக்கப்படும் வரையில் பொறுத்திருக்க வேண்டும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : I think there is a misapprehension among the hon. Members. Article 372 of the Constitution protects all these old laws until they are modified. The Board of Revenue is looking into that matter.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இது தண்டனை அல்ல. அரசாங்கத்தின் பணத்தைக் கையாடல் செய்தவர்கள் அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டும் வரையில் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் இந்தச் சட்டத்தின் பொருள். அவர்கள் சிறையில் வைக்கப்பட்டிருக்கக்கூடிய நேரத்தில், அவர்கள் எவ்வளவு காலமாக இருக்கிறார்கள் என்று அறியலாமா ? இந்த ஐந்து பேர்கள் சிறையில் வைக்கப்பட்டிருக்க வேண்டிய நிலை ஏன் வந்தது? அவர்கள் சாதாரண கைதிகள் நடத்தப்படுவது போல் நடத்தப்

31st January 1966]

படுகிறார்களா அல்லது, காவல் கைதிகள் போல் நடத்தப்படுகிறார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் தொழிற் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி, இவர்களெல்லாம் இந்தக் குறிப்பிட்ட சட்டப்படி தண்டனைக்கு உட்பட்டவர்களாவர்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர்களுக்கு எப்படிச் சாப்பாடு போடுகிறார்கள் ?

கனம் திரு. வெ. ராமையா : அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

Short supply of coffee seeds

* 25 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government are aware of the short supply of coffee seeds, especially the peaberry variety in the State; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) According to the Chief Coffee Marketing Officer's report, there has been no short supply of coffee seeds especially peaberry variety in this State.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : பொதுவாக, காப்பி போர்டு நம்முடைய ராஜ்யத்திற்குத் தேவையான பீபரி காப்பிக் கொட்டையில் மிகக் குறைந்த அளவேதான் ஒதுக்குகிறார்கள். அதுமட்டுமல்லாமல் நல்லரகங்களை வெளியில் அனுப்பிவிட்டு மட்ட ரகமானவற்றைத் தான் இங்கே சப்ளை செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அரசாங்கம் இதைக் கவனித்து நம் ராஜ்யத்திற்குத் தேவையான உயர்ந்த ரகக் கொட்டையை இங்கே சப்ளை செய்ய என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளார்கள்?

கனம் திரு. வெ. ராமையா : நம் ராஜ்ய நிலைமையைப் பற்றிப் பதில் சொன்னேன். காப்பி மார்க்கெட்டிங் போர்டில் இருந்து ஏறத்தாழ 50 சத விகிதம் நம் ராஜ்யத்திற்குக் கிடைக்கிறது. அதுவும் இந்தக் குறிப்பிட்ட ரகம் 60 சத விகிதம் கிடைக்கிறது. மற்ற மாநிலங்களோடு பார்க்கும்போது இது மிகவும் அதிகம். இருந்தும், காப்பியின் தேவை அதிகமாக இருக்கிற காரணத்தினால் இது மிகவும் குறைவு போலத் தோன்றுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நம் தேசத்திலே குறிப்பாக நம் மாநிலம் தான் காபி சாப்பிடும் பழக்கம் கொண்டது. மற்ற மாநிலங்களில் தேயிலையைத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். ஆகவே, நம் மாநிலத்திற்கு இன்னும் அதிகமாக காப்பிக்கொட்டை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ? காபி போர்டின்—டெப்போ விநியோகத்தில் உள்ளே துஷ்பிரயோகம் செய்ய வழி இருப்பதனால் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. வெ. ராமையா : காபி போர்டின் டெப்போக்கள் மூலம் மட்டும் அல்ல, விநியோக ஏற்பாடு. தனிப்பட்ட வியாபாரிகளும் சந்தையில் போய் ஏலம் எடுத்து வருகிறார்கள், இன்னும்